Y.MCA

## புங்குடுதீவில் கடும் வரட்சி குடிநீர் கலன் இரண்டு ரூபா

புங்குடுதீவுப் பகுதியில் ஒரு கலன் குடி தண்ணீர் இரண்டு ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தற்பொழுது புங்குடுதீவுப் பகுதியில் கடும் வரட்சி நாளுக்கு நாள் அதிகரித்து வருவதினால் இங்குள்ள கிணறுகளில் இருக்கும் தண்ணீர் வற்றி உப்பு நீராகவும் மாறி வருகின்றது. வேலணை சாட்டிப்பகுதியில் இருந்தே தனியார் வாகனங்கள் மூலமாக — 04 ஆம் பக்கம் பார்க்க

## மாத்தளையில் கருத்தரங்கு சிங்களத்தில் நடைபெற்றது

மத்திய வங்கியின் மாத்தளைக் கிளையின் அனுசரணையுடன் சிறு கைத்தொழில் அமைச்சினால் நடாத்தப்பட்ட சுயதொழில் வேலைவாய்ப்பு பற்றிய கருத்தரங்கு தனிச்சிங்களத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட தமிழ், யுவதிகள் மொழி தெரியாததால் பெரிதும் அவதிப்பட்டனராம். அதுவும் கடைசி நேரத்தில் இது தொடர்பான —04 ஆம் பக்கம் பார்க்க

## சிறுவர் விளையாட்டினால் லொறியில் தீ பற்றியது

பூநகரி செட்டிய குறிச்சியில் உள்ள வீடு ஒன்றில் தரித்து நின்ற லொறி ஒன்று சிறுவர்களின் விளையாட்டினால் தீப்பற்றி எரிந்தது. இந்த லொறியில் ஏறி விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் கற்பூரக்கட்டிகளை கொளுத்தி விளையாடினர். அதன் தீ லொறிக்கு கீழே இருந்த வைக்கோல் கட்டில் பிடித்ததால் லொறியிலும் தீ பற்றிக் கொண்டது லொறி — 04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4 - 50

# முரசொலி

முரசு 05 ஒலி 144 பிரசோற்பத்தி சித்திரை 08 ( 21-04-1991 ) ஞாயிறு

## வியட்நாமில் தகவல் மையம்

வியட்நாம் கெரில்லாக்களுடனான போரின் போது காணாமற்போன அமெரிக்கப் படைகளின் விபரங்களை திரட்ட ஹனோயில் தகவல் சேகரிப்பு நிலையம் ஒன்றை அமெரிக்கா நிறுவுகிறது.

## ஓய்வு பெறுகிறார்

யாழ் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் செல்வி புஷ்பா சண்முகம் — 4 ஆம் பக்கம் பார்க்க

## மின்சாரம் கிடைத்தாலும் விநியோகம் இல்லை!

வடபகுதியில் உள்ள பெரும்பாலான மின்மாற்றிகள் பழுதடையும் நிலையில் உள்ளதாக இலங்கை மின்சார சபை உயர் அதிகாரி ஒருவர் கவலை தெரிவித்தார். வடபகுதியில் உள்ள 90 விதமான மின்மாற்றிகளிலிருந்து மின்மாற்றிஓயில் திருடப்பட்டுள்ள தாலேயே இந்நிலை தோன்றியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். கடந்த பத்து மாதங்களாக மின்சாரம் கிடைக்காமையாலும் மின்மாற்றி ஒயில் திருடப்பட்டுள்ளதாலும் மின்மாற்றிகளிலுள்ள பல இயந்திரங்கள் மீண்டும் பாவிக்க முடியாத அளவுக்கு பழுதடைந்துவிடும். மின்மாற்றி ஒயில் திருடப்படாத — 04 ஆம் பக்கம் பார்க்க

# படையினர் புரியும் கொலைகளை நியாயப்படுத்த முடியாது!

## அரசுக்கு சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் கடிதம்

"அரச படைகள் சம்பந்தப்படும் மனித உரிமை மீறல்களையும் எதிர்த்தரப்பு குழுக்கள் செய்யும் அத்துமீறல்களையும் சமப்படுத்தும் தங்கள் வாதம் பிரச்சினையை திசை திருப்புகிறது. அரசாங்கமும் தீவிரவாதக் குழுக்களும் சமம் அல்ல; நாம் அப்படிக் கருதவும் இல்லை" இவ்வாறு சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் இயன் மாட்டின் ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோனுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

சர்வதேச மன்னிப்புச் சபையின் சட்டத்தரணிகள் குழுவின் தலைவருக்கு திரு. வீரக்கோன் எழுதிய கடிதத்தை மறுத்தே இவ்வாறு பதில் எழுதப்பட்டுள்ளது.

"விவகாரத்தின் ஒரு பக்கத்தை மட்டும் நாம் வெளியிடுவதாகவும், ஓர் அரசாங்கத்துக்கு தன்னைப் பாதுகாக்கும் உரிமை உண்டென்பதைப் புறக்கணிப்பதாகவும் பொய்க் குற்றம் சாட்டுகிறீர்கள்.

தீவிரவாதிகள் புரியும் அத்துமீறல்களை நாம் நியாயப்படுத்துவதாகவும் ஊக்குவிப்பதாகவும் வாதிடுகிறீர்கள். தீவிரவாதத்துக்கு எதிராக தங்கள் படையினர் செயற்படும்போது இத்தகைய சம்பவங்கள் தவிர்க்க முடியாதவை என்றும் உலகெங்கும் இராணுவத்தினர் மேற்கொள்ளும் நடைமுறை அதுவென்றும் சாதிக்கிறீர்கள்.

— 04 ஆம் பக்கம் பார்க்க

## மடுவில் அகதிகள் அதிகரிப்பு

## யாழ் நகரில் இரவு தீ!

கிராண்லி வீதியில் உள்ள வின்னர் கல்வி நிலையம் நேற்று இரவு 7.30 மணியளவில் திடீரெனத் தீப்பற்றியதால் இங்குள்ள நான்கு — 04 ஆம் பக்கம் பார்க்க

## லெப்.கேணல் கிரேசி புகழுடல்

### கிளிநொச்சியில் அஞ்சலிக்காக வைக்கப்படும்

பரப்புக்கடந்தானில் நடைபெற்ற மோதலில் வீரமரணமடைந்த லெப்.கேணல் கிரேசி 1985 இல் புலிகள் இயக்கத்தில் இணைந்தவர்.

இந்தியப் படையினருடனான மோதலில் இவர் கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பாளராக போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றார்.

1990 ஏப்பிரலில் இவர் மகளிர்படைப்பிரிவின் சுகி என்ற போராளியை திருமணம் செய்தார்.

லெப்.கேணல் கிரேசியின் புகழுடல் கண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் நேற்று பகல் 12 மணி முதல் 1 மணி வரை மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

இம்மண்ணுக்காகவும், தமிழ் மக்களுக்காகவும் போராடி தன்னுயிரை அர்ப்பணித்த இம்மாவீரனின் இறுதி அஞ்சலியில் பெருமளவு மக்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

பின்னர் இவரின் புகழுடல் புகையிரத நிலைய வீதியூடாக கண்டாவில்சந்தி அடைந்து பலாலி வீதியூடாக உரும்பிராய் சந்தி, கோப்பாய், கைதடி வந்தடைந்து இங்கிருந்து — 04 ஆம் பக்கம் பார்க்க

## பரப்புக்கடந்தானில் மோதல் விமானங்களும் குண்டு வீச்சு

நேற்று முன்தினம் மன்னார் பரப்புக்கடந்தான் பகுதியில் இருந்து முன்னேற முயன்ற ... யுடன் முன்னேறினர். இவர்களை வழிமடக்கி விடுதலைப் புலிகள் வான் தாக்கு...

## லெப். கேணல். கிரேசிக்கு குடாநாட்டில் அஞ்சலி

வீரமரணமடைந்த லெப். கேணல் கிரேசி (கணபதிப்பிள்ளை, கோபாலபிள்ளை) வட்டக்கச்சி மற்றும் வீரவேங்கைகளுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக நேற்று குடாநாடெங்கும், வீதிகள் ...

மன்னார் பரப்புக்கடந்தானில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலிலேயே லெப்.கேணல் கிரேசி வீரமரணமடைந்தார்.

லெப்.கேணல் கிரேசியின் ...

கத்துக்கு தன்னைப் பாதுகாக்கும் உரிமை உண்டென்ப

படும்போது இத்தகைய சம்பவங்கள் தவிர்க்க முடியாதவை

## மடுவில் அகதிகள் அதிகரிப்பு உணவு லொறிகளும் வந்தன

மடு மாதா தேவாலய அகதிகளின் தொகை இதுவரை 24, 500 என கடைசியாகக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களுக்கு நேற்று பத்து லொறிகளில் உணவுப் பொருள்கள் கொழும்பிலிருந்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மன்னார், வவுனியா பகுதியில் இடம்பெறும் மோதல்களையடுத்தே இங்கு அகதிகள் தொகை அதிகரித்து வருகிறது.

இதேபோல பேசாலை அகதி முகாமிலும் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (74)

நேற்று முன்தினம் மன்னார் பரப்புக்கடந்தான் பகுதியில் இருந்து முன்னேற முயன்ற இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் இடம் பெற்றது.

நேற்று முன்தினம் காலை அவ்ரோ விமானம், இரு பொம்மர்கள், இரு ஹெலிகப்டர்களின் தாக்குதலின் உதவியுடன் முன்னேறினர். இவர்களை வழிமடக்கி விடுதலைப் புலிகள் வான் தாக்குதலின் மத்தியிலும் எதிர்த் தாக்குதல் நடாத்தினர். மாலைவரைமோதல் நடந்தது.

இம்மோதலில் 9 படையினர் பலியானதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

புலிகள் தரப்பில் லெப். கேணல் இரேசி (க. கோபாலப் பிள்ளை வட்டக்கச்சி), 2ஆம்

— 04ஆம் பக்கம் பார்க்க

வேங்கைகளுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக நேற்று குடாநாடெங்கும், வீதிகள் தோரணங்களாலும் கறுப்புக் கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

நேற்று முன்தினம் (19.4 91

மோதலிலேயே லெப்.கேணல் இரேசி வீரமரணமடைந்தார்.

லெப்.கேணல் இரேசியின் பூதவுடல் நேற்று கோண்டாவிலில் பொது மக்களின் அஞ்சலிக்கு வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது (70)

## பரீட்சைப் பொருள்கள் நிலையங்களுக்கு சென்றன

கல்விப் பொதுத் தராதர (உயர்தர) விசேட பரீட்சைகள் நடைபெறும் பரீட்சை நிலையங்களுக்கு நேற்று யாழ் கல்வித் திணைக்களத்திலிருந்து எழுது பொருள்கள் அனுப்பிவைக்கப்பட்டன.

லொறி மூலம் யாழ் மாவட்டத்திலுள்ள அனைத்து நிலையங்களுக்கும் இவை எடுத்துச் செல்லப்பட்டன.

இதேவேளை வினாத்தாள்களை எடுத்து வருவதற்காக கொழும்பு சென்றிருந்த கல்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## வவுனியா பாடசாலைகளுக்கு தொலைக்காட்சிப் பெட்டிகள்

வவுனியா மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கு மாலை நேர வகுப்பு நடாத்த உதவியாக தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் கல்வி சம்பந்தமான கசட்டுகள் வழங்கப்படவுள்ளன.

இவற்றின் முதற்கட்டமாக இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம், ஈரப்பெரிய

— 04ஆம் பக்கம் பார்க்க

## ஜெயலலிதாவின் புதிய அறிவிப்பு

## எஸ். ரி. சோமசுந்தரமும் தேர்தலில் போட்டியிடுகிறார்

அ. தி. மு. க வின் மூத்த துணை பொதுச் செயலர் எஸ், ரி. சோமசுந்தரத்திற்கு சட்டப் பேரவை தேர்தலில் போட்டியிட திடீர் அனுமதி கிடைத்துள்ளது.

இதை நேற்று அறிவித்த செல்வி. ஜெயலலிதா இவர் தஞ்சாவூர் தொகுதியில் போட்டியிட அனுமதிக்கப்பட்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## ஊரடங்கு நீக்கம்

கிளிநொச்சியில் அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் இன்று காலை முதல் நீக்கப்பட்டுள்ளது.

## முஸ்லிம் காங்கிரஸிலிருந்து மேலும் சிலர் கட்சிமாறுகின்றனர்

புத்தளம் மாவட்டத்தில் உள்ள உடப்பு ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபைக்கு முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிட முன்வந்து அபேட்சகர்களாகப் பதிவு செய்த ஆறு பேர் தற்போது ஐக்கியதேசிய கட்சியில் சேர்ந்துள்ளனர்.

ஏற்கனவே அனுராதபுரத்தில் மூன்று முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்கள் ஐக்கிய தேசிய கட்சிக்கு மாறியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்கள் பயமுறுத்தப்படுவதாக அதன் தலைவர் அஷ்ரப் அரசிடம் புகார் செய்துள்ளதும் தெரிந்ததே. (88)

## மந்திகை ஆஸ்பத்திரிக்கு அவசியம் இரத்தம் தேவை

மந்திகை அரசினர் வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு அவசியம் இரத்தம் தேவைப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இரத்ததானம் செய்ய விரும்புவோர்களை உடனடி

— 4 ஆம் பக்கம் பார்க்க

## கம்புறுப்பிட்டி வீடமைப்புக்கு தமிழ் வர்த்தகர் நிதியுதவி!

சிங்கள மக்களுக்கான கம்புறுப்பிட்டிய வீடமைப்புத் திட்டத்துக்கு தமிழர் ஒருவர் நாலரை லட்சம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## தேர்தல் தேர்த்திருவிழா! தமிழகம் தற்போதுதயார்!!

தமிழகத்தில் தேர்தல் விழா தேர்த்திருவிழா போன்று களைகட்ட ஆரம்பித்துள்ளதாக அகில இந்திய வானொலி வர்ணித்துள்ளது.

அரசியல் பக்தர்கள் தத்தமது கட்சிக் கோவில்களை மூலஸ்தானங்களாக முற்றுகையிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

கட்சி அலுவலக வளவுகளில் தேர்த்திருவிழாவுக்கு வந்தது போல் ஒரே சனக்கூட்டம் வெளியே வீதிகளில் அரைப்பகுதியைக் கார்கள் அடைத்துக் கொண்டிருக்கின்றன.

ஆலய உற்சவ மூர்த்திகள் போல தலைவர்களின் கட்அவுட்கள் சென்னை நகர கேந்திர நிலையங்களில் வைக்கப்பட்டுள்ளன.

வேட்பாளர்களாக மாற விரும்பும் கட்சி முக்கியஸ்தர்கள் தமது ஆதரவாளர்களுடன் சென்னைக்கு வந்து குவிந்துகொண்டிருக்கிறார்கள்.

ஊர்கூடி தேர் இழுக்கும் போது பிரச்சினைகள் உருவெடுப்பது போல இத்தேர்தல் தேரை இழுப்பதிலும் வன்முறைகள் எழ ஆரம்பித்துள்ளன... தேர்தல் தேரை இழுக்க தமிழகம் தயாராகிவிட்டது...என வானொலி வர்ணித்துள்ளது.

## பஞ்சாப், அஸாம் மாநிலங்களில் தேர்தல்கள் ஒத்திவைப்பு

இந்தியாவில் பஞ்சாப், அஸாம்மாநிலங்களில்நாடாளுமன்ற, சட்டமன்ற தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன

பஞ்சாப்பில் மே மாதம் 20 ஆம் திகதியும், அஸாமில் 23 ஆம் திகதியும்இத்தேர்தல்கள் நடாத்தப் படுமென முன்னர் அறிவிக்கப் பட்டிருந்தது

ஆனால் இவ்விரு மாநிலங்களிலும் விசேடபந்தோபஸ்து நடவடிக்கைகளை மேற்கொண்ட பின்னரேயே தேர்தலை நடாத்த முடியுமென ஆலோசனை தெரிவிக்கப் பட்டதினாலேயே இந்தமுடிவு எடுக்கப்பட்டுள்ளது.

எனினும் இவ்விரு மாநிலங்களிலும் முன்னர் குறிப்பிட்ட திகதிகளில் நியமனப் பத்திரத்தாக்கல் பரிசீலனை, விலத்தல் என்பன திட்டமிட்டவாறு நடாத்தப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## சங்கானையிலும் அன்னைக்கு அஞ்சலி

அன்னை பூபதியின் மூன்றாவது நினைவு தினத்தை முன்னிட்டு அன்னாருக்கு அஞ்சலி செலுத்து மூகமாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சங்கானை, பண்டத்தரிப்பு பகுதியிலுள்ள கடைகள், வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன.

முக்கிய சந்திகளில் அன்னையின் திருவுருவப்படம் வைக்கப்பட்டு மலர் மாலைகளினால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. (13)

## ஒட்டுநர் தேவை

### இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்

### யாழ் - கிளை.

மேற் குறப்பட்ட சங்கத்தில் ஒட்டுநர்கட்கு வெற்றிடங்கள் உண்டு. எனவே தகுதியுடையோர் தங்கள் விண்ணப்பங்களை மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு 26-04-91 பிற்பகல் 3 மணிக்கு முன் சமர்ப்பிக்கவும் கடித உறையின் இடது மூலையில் "ஒட்டுநர் விண்ணப்பம்" எனக் குறிப்பிடவும்.

தலைவர்.

04093

# பதினைந்து தினங்களில் கூட்டுப்பசளை புதியமுறை கிளி.விவசாயப் பகுதியால் அறிமுகம்

மிகக் குறுகிய நாட்களில் கூட்டுப்பசளையை தயாரிக்கும் புதிய முறையொன்றை கிளிநொச்சி விவசாயத் திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளது.

பிரத்தியேக செய்தி

பதினைந்து தினங்களில் கூட்டுப்பசளையை தயாரிக்கக்கூடிய இம்முறை உர வகைகள் தட்டுப்பாடாக உள்ள இவ்வேளையில் வடபகுதி விவசாயிகளுக்கு பெரும் பயனை அளிக்குமென விவசாயப்பகுதியினர் தெரிவித்துள்ளனர்.முன்னைய முறைப்படி இத்தகைய கூட்டுப்பசளையை தயாரிக்க கழிவுப் பொருட்களை ஆகக்குறைந்தது மூன்று மாத காலம் உக்கவிட வேண்டியிருந்தது.

இம்முறையில் முதலில் குப்பை கூழங்களில் உள்ள கடதாசி, பொலித்தீன், பிளாஸ்ரிக் போன்ற சேதனப் பொருட்களை அகற்றி பின் கழிவுப் பொருட்களை மண்வெட்டியினால் துண்டுகளாக வெட்டுதல் வேண்டும். பின் 4 பங்கு கழிவுப் பொருளுக்கு ஒருபங்கு பழைய கூட்டுப் பசளை என்ற விகிதத்தில் கலந்து 8'×6' நிலப்பரப்பில் கழிவுப்பொருள் 6 அங்குல உயரத்திற்கு இடப்படல் வேண்டும்.

பின் சாணிக்கலவை அல்லது சலம்கொண்ட மண்ணை அதற்கு மேல் படையாக போடல் வேண்டும். இவ்வாறு மாறி மாறி 8 படைகள் வரைபோட்டு பின் களிமண்ணினால் பூசி முற்றாக அக் குவியலை மூடிவிடல் வேண்டும்.

பின் குவியலை இடையிடையே பிரித்து காற்றோட்டம் நன்கு கிடைக்கச் செய்ய வேண்டும். முறையே 2 ஆம் 6 ஆம் 9 ஆம் 11 ஆம் நாட்களில் ஆக 4 முறை குவியலை பிரித்து பக்கத்தில் அதே விஸ்தீரணத்தில் குவித்து பின் களி மண்ணினால் முன்பு போல் பூசிமூடி விடல் வேண்டும். 15 ஆம் நாளில் இறந்த கூட்டுப்பசளையைப்பெற முடியும். (34)

## வீட்டுக் காவலிலிருந்த எர்ஷாத் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார்

பங்களாதேஷின் முன்னாள் ஜனாதிபதி ஜெனரல் எர்ஷாத் சிறைக் காவலுக்கு மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை இவர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தார். இவரை சிறைக் காவலுக்கு மாற்ற வேண்டுமென பங்களாதேஷில் மாணவர்களும், அரசியல்வாதிகளும் வலியுறுத்தி வந்தனர்.

எர்ஷாத்துக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுக்களைச் சிறப்பு நீதிமன்றம் ஒன்று தற்பொழுது விசாரித்து வருகின்றது. (78)

## வலை போடுபவர் இருக்க மீனைத்திருடும் கும்பல்கள்; யாழ் கரையோர மீன்பிடி பாதிப்புறும் அபாயம்!

யாழ் கரையோரச் கரையூர், பாசையூர், பண்ணை, அரியாலைப் பகுதிகளில் சிறகு வலைமூலம் மீன்பிடிப்பவர்களின் உபகரணங்கள் இரவு நேரங்களில் கடலில் வைத்து திருடப்படுவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன்சிலர் தமது சொந்த வலைகளை விட்டு வேறு மீனவர்களின் பட்டி வலையில் இருந்து கள்ளத்தனமாக மீன்பிடிப்பதாகவும் சொந்தக்காரன் வரமுன்னர் பட்டிவலைக்கு போடப்பட்டிருக்கும் கம்புகளை களவாடுவதாகவும் புகார் தெரிவிக்கப் படுகிறது.

இதனால் தற்சமயம் கம்புகளை அதிக விலை கொடுத்து வாங்க முடியாமல் மீனவர்கள் மிகவும் சிரமப்படுகின்றனர்.

பகல்நேரங்களில் பண்ணைப் பாலத்துக்கு அருகாமையில் உள்ள பட்டிவலைகளில் இருந்து பெண்கள் அத்தாங்கி கொண்டு மீனைத்திருடுவதாகவும் இதனால் இவ்வலைகளில் பழுதுகள் ஏற்படுவதாகவும் கம்புகள் விழுந்து விடுவதனால் சொந்தக்காரர்களினால் அதிகம் மீனைப் பிடிக்க முடியாத நிலை ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (78)

## எழுதுநர் பதவி உயர்வுப் பரீட்சை பெறுபேறுகள் தற்போது வெளியாகின

1989 ஆம் ஆண்டு பொது நிர்வாக, மாகாண சபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் நடாத்தப்பட்ட பொது எழுதுநர் சேவையின் வகுப்பு IIபிரிவு"அ"க்கு நியமிப்பதற்கான பரீட்சை முடிவுகள் தற்சமயம் வெளியாகியுள்ளன,

சகல மொழிகளிலுமாக 139 பேர் இப்பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

வட,கிழக்கு மாகாணங்களைச்சேர்ந்த கணிசமான அளவு தமிழ் ஊழியர்களும் சித்தியடைந்துள்ளனர்.

இப்பரீட்சைப் பெறுபேறுகளை 01 03 1991 அரச வர்த்தமானியில் பார்வையிடமுடியும். (வ-1)

## வரலாற்றுக் கருத்தரங்கு

இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ் பல்கலைக்கழகப் புவியியல் கருத்தரங்கு மண்டபத்தில் வரலாறு சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று நடைபெற உள்ளது.

இக்கருத்தரங்கை யாழ் விஞ்ஞான சங்கத்தின் சமூக விஞ்ஞானப் பிரிவும், பல்கலைக்கழக வரலாற்றுத்துறையும்,யாழ் மாவட்டக் கல்வித் திணைக்களமும் இணைந்து நடாத்த உள்ளன.

வரலாற்றைக் கற்பிக்கும் போது எழுகின்ற பிரச்சினைகள் பற்றியே முக்கியமாக இதில் கவனம் செலுத்தப்பட இருக்கின்றது இதில் ஆசிரியர்களின் சார்பில் சேவைக்

## காங்கேசன் ஊழியர் கூட்டம்

நாளை திங்கள் கிழமை காலை 10 மணிக்கு நாவலர் வீதியில் உள்ள காங்கேசன் சிமெந்து கூட்டுத்தாபனத்தின் தற்காலிக காரியாலயத்தில் காங்கேசன் சிமெந்து பொதுத் தொழிலாளர் யூனியனின் நிர்வாக சபைக் கூட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ப10)

## தொழிலாளர் கல்வி மேதினத்தில் ஆரம்பம்

யாழ் பல்கலைக் கழகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள தொழிலாளர் கல்வி நெறிக்கான விரிவுரைகள் தொழிலாளர் தினமான மே 1ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது என யாழ் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (ப 10)

## 2-வது ஆண்டு நினைவஞ்சலி



...ணப்பம் ... எனக் குறிப்பிடவும்.

தலைவர்.

...லை 01 03 1991 அரச வர்த்தமானியில் பார்வையிடமுடியும். (ம-1)

...இருக்கின்றது இதில் ஆசிரியர்களின் சார்பில் சேவைக்கால ஆலோசகர்கள் மட்டுமே கலந்துகொள்ள இருக்கிறார்கள். இக்கருத்தரங்கு மேற்படி விடயமாக நடைபெறும் தொடர் கருத்தரங்கில் முதலாவதாக அமைவதோடு இதனைத் தொடர்ந்து யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை மேலும் பல கருத்தரங்குகளை மாவட்ட ரீதியாக ஒழுங்கு செய்ய எண்ணி இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## 6 ஆவது நினைவஞ்சலி



### திருமதி ஆர். செல்வராணி தம்பிராசா

நாம் வாழ வழிகாட்டி அன்பால் பண்பால் நம்மை நல்வழி நடத்தி, கலங்கரை விளக்காய் ஒளிதந்து அணைந்த எம் அன்புத் தெய்வமே, உம் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

லயன்ஸ் கொட்டேஜ்,
11/1 ஈச்சமோட்டை
யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரன்,
மைத்துனிகுடும்பத்தினர்.

04092

## மயிலணியில கிராம எழுச்சி


சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலயத்தின் விவசாயப்பிரிவு புதுவருடத்தை முன்னிட்டுக் கிராம எழுச்சி விடயமாக மரநடுகையை ஆரம்பித்துள்ளது மரக்கன்றுகளை நாட்டிப், பாதுகாப்பு அமைத்துப் பராமரித்து வரும் முறையில் மேற்படி திட்டம் போட்டியாக அமையும். இப்போட்டியில் வித்தியாலயத்தின் விவசாயமாணவர், சாரணர் உட்படப் பலரும் கலந்து கொள்கின்றனர்.

மேலும், உணவுற்பத்தியை முன்னிட்டு இவ்வித்தியாலயம் பாடசாலைத் தோட்டத்தையும், கடந்த ஆண்டு தை முதல் வீட்டுத்தோட்டப் போட்டியையும் தொடர்ந்து பல கட்டங்களாகச் சிறப்பாக நடாத்திவருவதுடன், மாணவரின் அறிவு, திறன், மனப்பாங்கை வளர்க்கும் பொருட்டு இவ்வாண்டில் பலவித வேறு போட்டிகளை ஆரம்பித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## சிறுவிளம்பரம்

### தேவை

நற்பண்புள்ள, இந்து சமய, க.பொ.த. உயர்தரம் (விஞ்ஞானம்) சித்தியடைந்த அண்மையில் 32 வயது நிரம்பிய ஒரே மகளுக்குப் பின்வரும் தகுதிகளில் ஒன்றுள்ள வரன் தேவை. பொறியியலாளர், இலங்கைப் பட்டதாரி, ரீ.ஏ.ஆர் எம் பி. தொடர்பு: விளம்பர இலக்கம் 298மே/பா முரசொலி, கஸ்தூரியார்வீதி... யாழ்ப்பாணம். 04094



அமரர்

## திருமதி அன்னபூரணம் கனகநாயகம்

அவர்கள்

சீராண்டாய் சிறப்பாண்டாய் செம்மலே செல்வமே
சினமுன்னை ஆண்டதில்லை தீபமே தெய்வமே
பேராண்டாய் புகழாண்டாய் பேரன்புச் சின்னமே
அன்னமே
பெருமைக்கு உன்மனம் தான் காரணமே பூரணமே
நீராண்ட கண்களுடன் நெஞ்சத்தின் புண்களுடன்
நீயாண்ட நெறி காத்து நின்வழி பார்த்து
ஈராண்டாய் உன் நினைவில் வாடுகிறோம்
இருள்மனையில் உன் நிழலைத் தேடுகிறோம்.

பண்ணாகம்,
சுழிபுரம்.
1991-04-21.

குடும்பத்தினர்.

04097

093

## உயிரியல் வாயுவைப் பயன்படுத்தி ஏவுகணை தயாரிப்பு!!
## நாகர்கோவில் விண்வெளி நிலையத்தில் பரீட்சார்த்த முயற்சி!

ஏவுகணைகளுக்கான எரிபொருளாக உயிரியல் வாயுக்களைப் பயன்படுத்தும் பரிசோதனை முயற்சியொன்று தமிழகம் நாகர்கோவிலில் உள்ள விண்வெளி நிலையத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தப் பரிசோதனை முயற்சிக்கென இந்திய மத்திய அரசு 50 கோடி ரூபாவினை வழங்கியுள்ளது.

ஐதரசன், ஒட்சிசன் ஆகிய இரு வாயுக்களும் திரவமாக மாற்றப்பட்டு, அவற்றினைப் பின்னர் திரவ எரிபொருளாக மாற்றும் இம்முயற்சி வெற்றி பெற்றால் ஏவுகணைகளைத் தயாரிப்பதில் ஏற்படும் பெரும் செலவு தவிர்க்கப்படுமென விண்வெளி நிலைய நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்பொழுது ஏவுகணைகளின் தயாரிப்பில் அவற்றிற்கான ஏவுசக்தியை வழங்குவதற்கே அதிக பணம் செலவழிக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன் சென்னையில் உள்ள தொழிற்சாலைகளில் எரிசக்தியாக உயிரியல் கழிவுகளைப் பயன்படுத்தவும், இதே உயிரியல் கழிவுகளின் மூலம் மின்சக்தியைப் பெறவும் புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ் மாவட்டத்தில் புதிதாக குடும்பநல சேவையாளர்கள் நியமனம்
## சுகாதார அதிகாரிகள் பிரிவும் அதிகரிக்கும்

யாழ் மாவட்டத்தில் புதிதாகப் பல குடும்ப நல சேவையாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர். எதிர்வரும் மே மாதம் முதல் இந்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

மூவாயிரம் மக்களுக்கு ஒரு குடும்பநல சேவையாளர் என்ற புதிய திட்டத்திற்கமையவே மேலதிகமாக இந்த மருத்துவ மாதர் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை இங்கு தற்போதுள்ள சுகாதார அதிகாரி பிரிவுகளை இரண்டாகப் பிரித்து புதிய சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளை அடுத்த மாதம் தொடக்கம் இயங்கச் செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (13)

## வறுத்த கடலை, வற்றக் காய்ச்சிய பால் இவற்றாலும் உடல் நலத்திற்குக் கேடு

புரதச் சத்து மிக்க வறுத்த கடலையை அதிகமாக உண்டால் கண் பார்வை குறைவு கை, கால் மூட்டு வலி என்பன உண்டாகும் என வைத்திய நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். அதேபோல் வற்றக் காய்ச்சிய பாலைக் குடிப்பதாலும் உடல் நலத்திற்குக் கேடு உண்டாகும்.

"வாழ்விலும், சுற்றுப்புறச் சூழலிலும் புரதச்சத்து" என்ற சர்வதேசக் கருத்தரங்கு ஒன்றில் இத்தகைய தகவல்கள் தெரிவிக்கப்பட்டன.

புரதச்சத்து அதிகமுள்ள நிலக்கடலை, பால் போன்றவற்றை அதிக நேரம் தீயில் வாட்டுவதனால் இரசாயனப் பொருட்களின் அமைப்பு மாறுபடுகின்றது. அவை உடலில் இரத்தஅணுக்களுடன் சேரமுடியாது உள்ளது. இதனால் பாதகமான விளைவுகள் உண்டாகும் என விஞ்ஞான ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

சென்னை லயோலா கல்லூரியின் புரதச் சத்து ஆராய்ச்சித்துறை ஏற்பாடு செய்த இக் கருத்தரங்கில் அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் இருந்து 25 மருத்துவ நிபுணர்களும், இந்தியாவில் இருந்து 200 விஞ்ஞானிகளும் கலந்து கொண்டனர். (ப-10)

## வவுனியாவில் யாழ் பொலிஸ்பிரிவு! ஆனால் கடமைகள் எதுவும் இல்லை

யாழ்ப்பாணப் பொலிஸ் பிரிவொன்று வவுனியாவில் இயங்குவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வவுனியாவில் தனியாக ...

... ஈடுபட அனுமதிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ப 10)

## 3 மாதங்களாக கிரீஸ் சிறையில் 45 தமிழ்வாலிபர்கள் தடுத்துவைப்பு

இத்தாலி நாட்டிற்குச் சென்ற நாற்பத்தைந்து இலங்கைத் தமிழ் வாலிபர்கள் இடையில் உள்ள கிறீஸ் நாட்டில் கடந்த மூன்று மாதமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வாலிபர்கள் தொழில் வாய்ப்புத் தேடி இலங்கையில் இருந்து ஓமான் சென்று ஓமானிலிருந்து இத்தாலி நாட்டிற்குச் செல்ல முயன்ற போதே இடைவழியில் கிறீஸ் விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் தாம் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை பற்றித் தற்போது தமது குடும்பத்தவர்களுக்குக் கடித மூலம் தெரிவித்துள்ளனர்.

இவர்களில் பலர் வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (39)

## பல ஆசிரியர்களுக்கு மீள் நியமனம்; ஆனால் கடமையேற்க அவர்கள் மறுப்பு

சுய விருப்பத்தின் பேரில் ஓய்வுபெறும் சலுகைத் திட்டத்தின் கீழ், ஓய்வு பெற்ற பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட பிரிவைச் சேர்ந்த கணித, விஞ்ஞான ஆசிரியர்கள் 11 பேருக்கு மீண்டும் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்கள் ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் கடமையாற்ற விரும்புவதாக விண்ணப்பித்ததன் பேரில் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டன. பின் தீவுப் பகுதியிலும் காரைநகர் பகுதியிலும் உள்ள ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளில் இவர்களுக்கு மீண்டும் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்ற அனுமதி வழங்கப்பட்டதாம்.

ஆனால் தமக்கு வசதியான சொந்த ஊரிலுள்ள பாடசாலைகளுக்கு மீண்டும் நியமனம் தரப்படவில்லை என்ற ...

## தொண்டர் ஆசிரியர் ஆவணங்கள்

## இடம் பெயர்ந்தோர் விசேட நிவாரணம்

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் இராணுவ முகாம் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கு சுழற்சிமுறையில் வழங்கவுள்ள நிவாரணத்தின் 2 ஆம் கட்டமாக பலாலி இராணுவமுகாம் பகுதிகளான மயிலிட்டி வடக்கு, பலாலி கிழக்கு, பலாலி வடமேற்கு, பலாலி தெற்கு, குரும்பசிட்டி கிழக்கு ஆகிய கிராமசேவகர் பகுதிகளைச் சேர்ந்தோருக்கு 23 ஆம் திகதி காலை 9 மணி முதல் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நிவாரணம்வழங்கவுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்ட கிராமசேவகர் பிரிவுகளில் உள்ள வர்கள் பங்கீட்டு அட்டைகளுடன் சென்று நிவாரணம் பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## மருதங்கேணியில் மருந்து இல்லை!

மருதங்கேணி, வைத்திய சாலையில் மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தற்போது இப்பகுதியில் மலேரியா, நெருப்புக்காய்ச்சல் சாதாரண காய்ச்சல் போன்ற நோய்கள் அதிகரித்துள்ளதால், வெளிநோயாளர் பிரிவில் நாள் தோறும் சராசரி இருநூறு பேர்வரை சிகிச்சை பெற செல்கின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (43)

## நகர சபையில் நலன்புரிச் சங்கம்

சாவகச்சேரி நகரசபையின் ஊழியர் நலன் புரிச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் சாவகச்சேரி பொது நூல் நிலைய மண்டபத்தில் சங்கத் தலைவர் த. நவரத்தினராசா தலைமையில் நடைபெற்றது.

அதில் பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் த நவரத்தினராசா, உபதலைவர் ஆ. சந்திரமௌலீசன், செயலாளர் சே. உதயகுமாரன், இணைச் செயலாளர் ந. சுந்தரலிங்கம், பொருளாளர் பி. இன்னத்துரை வெளிக்கள உத்தியோகத்தர் ஐ கிருஷ்ணன், உதவிக் கணக்காளர் உத்தியோகத்தர் பா. ஞானப்பிரகாசம், கணக்காய்வாளர் எஸ். சரவணபவ நிர்வாகசபை உத்தியோகத்தர்களாக எண்மர் தெரிவு செய்யப்பட்டனர். (ப-5)

## குண்டு வெடிப்பில் அறுவர் பலி

பம்பாய் சாந்தகுருஸ் மின் அணு உபகரண ஏற்றுமதி உற்பத்தி நிலையத்திற்கு அருகில் நேற்று முன்தினம் இரவு சக்திமிக்க குண்டு ஒன்று வெடித்ததில் அறுவர் கொல்லப்பட்டனர், இருவர் படுகாயமுற்றனர். இறந்தோரில் ஐவர் இந்த உபகரண உற்பத்தி நிறுவன ஊழியர்களாவர்.

## ஒப்படைகள் வந்துசேர்ந்தன

பட்டமேற்கல்வி டிப்ளோமா கற்கைநெறிக்கு கடந்த வருடம் சமர்ப்பிக்கப்பட்ட முதலாம், இரண்டாம் ஒப்படைகள் திருத்தப்பட்டு யாழ் பிராந்திய நிலையத்திற்கு வந்துள்ளன.

முன்பு எடுக்காதவர்கள் தமது மாணவர் பதிவுப் புத்தகத்துடன் திங்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் கடமை நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளும்படி திறந்த பல்கலைக்கழக உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். ப7

## லலிதா சாஸ்திரி காலமானார்

இந்தியாவின் பிரபல பரத நாட்டியக் கலைஞர் திருமதி லலிதா சாஸ்திரி தனது 57 ஆவது வயதில் நேற்று முன்தினம் புதுடில்லியில் மாரடைப்பால் காலமானார்.

இவர் 1979 ஆம் ஆண்டு இந்திய சாகித்திய அமைப்பின் சிறப்பு விருதினைப் பெற்றிருந்தார்.

## விவசாயிகளுக்கு 'கேயர்' உதவி

பண்டத்தரிப்பு உலர் வலய அபிவிருத்திக் கழகத்திற்கு "கேயர்" நிறுவனம் மாவட்ட உலர் வலய அபிவிருத்தி மன்றத்திற்கு ஊடாகச் சுமார் 15 ஆயிரம் ரூபா பெறுமதி மிக்க நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றை வழங்கியுள்ளது.

இதேவேளை கழக உறுப்பினர்களான 40 பேருக்கு மூன்றாவது கட்டமாக விவசாய செய்கைக்கென்று மண்ணெண்ணெய், உரம் ஆகியனவும் வழங்கப்பட்டுள்ளன. கழக உறுப்பினர்கள் பயறு, கௌப்பி, எள்ளு போன்ற உப-உணவுச் செய்கைகளில் மிகவும் ஊக்கத்துடனும், ஆர்வத்துடனும் ஈடுபட்டு வருவதாகக் கழகத் தலைவி திருமதி ஜெயமணி ஜோசவ் தெரிவித்தார். (13)

இயங்குவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வவுனியாவில் தனியாக இயங்கும் யாழ்ப்பாணப் பொலிஸ் பிரிவிற்கு யாழ் குடாநாட்டைச் சேர்ந்த தமிழ் இன்ஸ்பெக்டர் ஒருவர் பொறுப்பாக இருப்பதாகவும் சுமார் 10பொலிஸார் கடமையாற்றுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இங்கிருந்து சம்பளம் எடுக்க சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்களில் பலர் ஓய்வு பெற்றதும் இவர் கடமையாற்றுவதும் தெரிந்ததே. எனினும் இப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்தவர்கள் பொறுப்பான கடமைகளில்

படுகின்றது. (ப 10)

யாற்ற விரும்புவதாக விண்

சொந்த ஊரிலுள்ள பாடசாலைகளுக்கு மீண்டும் நியமனம் தரப்படவில்லை என்று இவர்களில் பலர் ஆட்சேபித்து பின்தங்கிய இடங்களில் கடமையாற்ற முன்வரவில்லை என்றும் இது பற்றி தெரிவிக்கப்படுகின்றது. (13)

தர்களாக எண்மர் தெரிவு செய்யப்பட்டனர். (ப-5)

தலைவி திருமதி ஜெயமணி ஜோசவ் தெரிவித்தார். (13)

## தொண்டர் ஆசிரியர் ஆவணங்கள் அதிகாரிகளின் பரிசீலனையில்

வவுனியா, கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளின் தொண்டர் ஆசிரியர்களின் ஆவணங்கள் தற்பொழுது கல்வித் திணைக்கள அதிகாரிகளினால் மீள் பரிசிலனை செய்யப்பட்டு வருகின்றன.

இப் பரிசீலனையின் போது கல்வித் திணைக்களத்தினால் அனுமதி வழங்கப்பட்ட கடிதம், தொண்டர் ஆசிரியரின் வரவு, தொண்டர் ஆசிரியரின் பாடக் குறிப்புகள் ஆகியன முக்கியமாக கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

ஆவணங்கள் பரிசீலனை செய்வதற்கு உதவியாக தொண்டர் ஆசிரியர்கள் கற்பிக்கும் பாடசாலைகளின் அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்கள் ஆகியோரும் அழைக்கப்பட்டிருந்தனர்.

மூலர்தாரப் பாடசாலைகளில் வைத்தே இந்தப் பரிசீலனை நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (43)

## 'மகவம்' விருது இன்று...

1988 - 89 ஈராண்டுகளுக்கான மகவம் கௌரவ விருது ஒப்பனைக் கலைஞர் சாமுவேல் பெஞ்சமினுக்கு இன்று பிற்பகல் அவரது யாழ் பழையபூங்கா வீதி இல்லத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

## உதவி இளைஞர் சேவை அதிகாரிகள் 16 பேரின் சம்பளம் இடைநிறுத்தம்

யாழ் மாவட்டத்தில் மூன்று வருடங்களுக்கு முன் உதவி இளைஞர் சேவை அதிகாரிகளாக சேர்க்கப்பட்ட பதினாறு பேரின் சம்பளங்கள் நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உதவி இளைஞர் சேவை அதிகாரிகளாக இருபத்திரண்டு பேரை 1988 இல் கல்வித்திணைக்களம் நியமித்தது.

இவர்கள் மூன்று வருடங்களுக்கு தேசிய இளைஞர் மன்றத்தின் கீழ் பணிபுரிய வேண்டும் எனவும் அதன் பின்னர் ஆசிரியர்களாக நியமிக்கப்படுவார்கள் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் மூன்று வருடசேவைக்குப் பின் இவர்களில் ஆறு பேருக்கு மட்டுமே ஆசிரியர் நியமனம்வழங்கப்பட்டுள்ளது.

யாழ்மாவட்டத்தைச்சேர்ந்த மிகுதி பதினாறு பேருக்கும் கடந்த மாசி மாதத்திலிருந்து எவ்விதமான கொடுப்பனவுகளும் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (16)

## சீனாவில் இந்தியத் தூதுவராக தமிழருக்குப் பதிலாக ஹிந்திக்காரர்

சீனாவில் இந்தியத் தூதுவராக இருந்த தமிழர் ஒருவர் அப்பதவியிலிருந்து அகற்றப்பட்டுள்ளார்.

இதுவரை சி. வி. ரங்கநாதன் என்ற தமிழ் நாட்டைச் சேர்ந்த இந்திய வெளியுறவுச் சேவை அதிகாரி ஒருவரே சீனாவில் இந்தியத் தூதுவராகப் பதவி வகித்து வந்தார்.

தற்பொழுது அவரது இடத்திற்கு லண்டனில் உதவி இந்தியத் தூதுவராகப் பணிபுரியும் சலமான் ஹைதர் என்ற ஹிந்திக்காரர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

## நம்மைச் சுற்றி...

அதிகாலை ஐந்தரைமணி. ரோட்டில் சன நடமாட்டமில்லை. அந்த மனிதர் மிக நிதானமாக, மெதுவாகச் சைக்கிளில் வந்து கொண்டிருந்தார். சைக்கிளின் கரியரில் ஒரு மூடை அரிசி.

ரோட்டோரத்தில் படுத்திருந்த இரு நாய்கள் சைக்கிளை நோட்டம் விட்டன. சைக்கிள் அண்மித்ததும் ஒருநாய் துரத்தத் தொடங்கியது. உடன் மற்ற நாயும் சேர்ந்து கொண்டது. மனிதர் இரு கால்களையும் உயரத் தூக்கிக் கொண்டார். எவ்வளவு தூரம் தான் Free wheel இல் ஓடுவது? காலைக் கீழ விட்டார். ஒரு நாய் 'லபக்' என்று காலைக் கவ்வியது. நிலை குலைந்து தடுமாறிய அவர் ''அடி அடி'' என்று கத்தியபடி சைக்கிளோடு சாய்ந்தார். காலில் நாய்க்கடி கையில் கல்லடி.

பொம்மர் ஹெலியைக் கண்டால் பங்கருக்குள் பதுங்கலாம் ரோட்டில் நாயைக் கண்டால் எங்கு பதுங்குவது?

வீட்டைக்காக்க நாய் வளர்ப்பவர்கள் ரோட்டைக்காக்க விட்டு விடுகிறார்கள். பிரதேச சபைகள் நடவடிக்கை எடுக்குமா?

— பாசுபதம்

★ வேலணையில் அன்னை பூபதி நினைவு கூட்டத்தில் யோகி

# பேச்சுவார்த்தை யுத்தநிறுத்தம் என்பன நிரந்தரத் தீர்வை தருபவையல்ல



பேச்சு வார்த்தை, யுத்த நிறுத்தம் எல்லாம் நிரந்தரத் தீர்வின்றி வெற்றி பெறமுடியாது. நாடு விடுதலை அடையும் வரை எமது போராட்டம் தொடரும், ஸ்ரீலங்கா அரசால் பேசப்படும் ஆயுத ஒப்படைப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை, நாம் வைத்திருக்கும் ஆயுதம் அவர்கள் எமக்குத் தந்ததல்ல நாம் அவர்களிடமிருந்து பறித்தெடுத்தது. இவ்வாறு நேற்று முன்தினம் வேலணைத்துறையூரில் நடைபெற்ற அன்னை பூபதியின் மூன்றாவதுஆண்டுநினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் திரு, யோகரட்ணம் யோகி குறிப்பிட்டார்.

தீவக மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் அன்பரசி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் தன்மானத் தமிழன் உணவுக்காக அன்றி உரிமைக்காகவே போராடுகின்றான் என்பதனை அன்னை பூபதி உலகிற்கு எடுத்துக் காட்டியவர், இன்று ஸ்ரீலங்கா இராணுவம் வெளிநாட்டு ஆயுதங்களுக்குப் பயப்படவில்லை எம்மால் தயாரிக்கப்பட்ட பசலின் 2000, ஜொனி, குப்பிசிறி, அருள் 89 ஆகிய ஆயுதங்களுக்கே அஞ்சுகின்றான், தமிழனால் தயாரிக்கப்பட்ட இவ்வாயுதங்கள் உலக ஆயுத வரிசையில் ஒன்றாகி விட்டன

கடந்த ஒன்பது மாதங்களில் 1224 போராளிகளை இழந்து விட்டோம். போராட்ட காலத்தில் இருந்து இன்று வரை 2745 போராளிகள் விடுதலை வேள்வியில் ஆகுதியாகியுள்ளனர் என்றார்,

தீவக அரசியற் பொறுப்பாளர் சுதா, யாழ் மாவட்ட மாணவர் இயக்கப் பொறுப்பாளர் மரிசாலப்பா, மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் நிசாந்தி, மகளிர் முன்னணி மூத்த உறுப்பினர் மாலினி உட்படப் பலரும் அங்கு உரையாற்றினர். (ப-12)

## உள்ளூர் காகிதத்தில் பத்திரிகை வெளிவருகிறது

நல்லூர் காகித ஆலையில் தயாரிக்கப்பட்ட உள்ளூர் காகிதத்தின் மூலம் புதிய பத்திரிகை ஒன்று விரைவில் வெளியிடப்படவுள்ளதாக நல்லூர் காகித ஆலை பொறுப்பாளரும் முறைசாராக் கல்வி அதிகாரியுமான ச. சுப்பிரமணியம் தெரிவித்தார்.

''முறைசாராக் கல்விக் கதிர்'' என்ற பெயரில் இப்பத்திரிகை வெளியிடப்படும் வாராந்த வெளியீடாக வரும் இப்பத்திரிகையில் கல்வி, சமூகம் போன்றவற்றிற்கு முக்கிய இடம் ஒதுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

முறைசாராக் கல்விப் பிரிவின் ஆதரவுடன் வெளியிடப்படும் இப்பத்திரிகையில் இலைமறை காயாக உள்ள எழுத்தாளர்கள் ஊக்குவிக்கப்படுவர்.

பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் கட்டுரைகளை வெட்டிக் கோவையாக்கக் கூடிய விதத்தில் இப்பத்திரிகை வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (70)

## மேஜர் றஞ்சன் நினைவாக சிறுவர்பூங்கா அமையும்

பருத்தித்துறையில் மேஜர் றஞ்சன் (சித்தப்பா) ஞாபகார்த்தமாக அழகிய நினைவாலயமும் சிறுவர் பூங்காவும் அமைக்கப்பட்டு வருகின்றன.

பருத்தித்துறை முதலாம் கட்டைச் சந்தியில் மாணவர் பொது நூலக அருகாமையிலேயே மேஜர் றஞ்சன் நினைவாலயமும் சிறுவர் பூங்காவும் அமைக்கப்பட்டு வருகின்றன.

மேஜர் றஞ்சன் மன்னார் ஸ்ரீலங்கா இராணுவ முகாம் தாக்குதல்களின் போது வீர மரணமடைந்தவரென்பது குறிப்பிடத்தக்கது. (15)

## 52 ஆயிரம் ரூபா மோசடி தமிழ் இளைஞருக்கு சிறை

கொழும்பில் ஹோல்பேஸ் ஹோட்டலில் விநியோக உத்தியோகத்தராகப் பணி புரிந்த தேவகுமார்- கந்தையா என்பவர் சுமார் ஐம்பத்திரண்டாயிரம் ரூபாவை கையாடல் செய்ததாக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் பொலிஸாரால் ஆஜர் செய்யப்பட்டார்.

இவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதை யடுத்து நீதிபதி ஐந்துவருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

ஒத்திவைக்கப்பட்ட கடூழியச் சிறைத்தண்டனையோடு இவருக்கு ஒருலட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

இந்த அபராதத்தை செலுத்த முடியாவிடில் பதினெட்டு மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டுமென்றும் நீதிபதி தீர்ப்பளித்தார். (33)

---

தம்பலப்பிட்டி...

**புங்குடுதீவில்...**

குடிதண்ணீர் புங்குடுதீவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இதேசமயம் புங்குடுதீவுப் பகுதியில் ஒரு போத்தல் மோர் பத்து ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்...

## இந்திய இராணுவம் அஸாமில் யுத்தநிறுத்தம்

அஸாமில் உல்பா தீவிரவாதிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளதாக இந்திய இராணுவம் அறிவித்துள்ளது

தேர்தல் நடவடிக்கைகளை சீர்குலைப்பதில்லை எனவும் அதன் பொருட்டு தாம் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துவதாக உல்பா இயக்கம் அறிவித்திருந்தது தெரிந்ததே.

---

**படையினர்...**

மனித உரிமை மீறல்கள் குறித்து நாம், முக்கியமாக அரசாங்கங்களைத் தட்டிக் கேட்கிறோம் என்பது சரி தமது குடிமக்களை வன்முறையில் இருந்து பாதுகாக்கும் தலையாய பொறுப்பு அரசாங்கங்களுக்கே உண்டு, சர்வதேச சட்டத்துக்கு அமைவாக அடிப்படை மனித உரிமைகள் குறித்த தமது கடப்பாடுகளை அரசாங்கங்கள் நிறைவேற்றும் என்றே நாம் நம்புகிறோம்.

எதிர்த்தரப்பினருடைய வன்முறை எவ்வளவு தீவிரமாக இருந்தாலும் ஒரு குடிமகன் தனது உயிரைப் பாதுகாக்கும் உரிமை, சித்திரவதையிலிருந்து விடுதலை ஆகிய அடிப்படை மனித உரிமைகளை அரசபடைகள் பறிப்பதை நியாயப்படுத்த முடியாது. வேண்டுமென்றே செய்யப்படும் கொலைகளையும் ...

### அதிபர்கள்கூட்டம்

மருதனாமடக் கல்விக் கோட்ட சகல அதிபர்களும் நாளை பி. ப. 2.30 மணிக்கு இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடக்கவிருக்கும் கல்வி சம்பந்தமான கலந்துரையாடலில் கலந்து கொள்ளும்படி மருதனாமடக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் வேண்டியுள்ளார்,

---

**ஒய்வு...**

ஒய்வு பெறவுள்ளதாக வைத்திய சாலை வட்டாரங்கள் ...

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில்

## உணவுக் கூப்பன் மீளாய்வு இடை நிறுத்த உத்தரவு

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த கிராம சேவையாளர்களை உணவுக் கூப்பன் மீளாய்வு செய்ய வேண்டாமென உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் திடீர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கூப்பன் முத்திரைகளை மீளாய்வு செய்வதைத் தற்காலிகமாக நிறுத்துமாறு திணைக்களத்திலிருந்து கிடைக்கப் பெற்ற அறிவித்தலை அடுத்தே மேற்படி பிரிவில் மீளாய்வு செய்வதை நிறுத்துமாறு உத்தரவிட்டுள்ளார். (12)

## சில அதிபர்கள் குறித்து புகார் அமைச்சர் லலித் எச்சரிக்கை

சிலபாடசாலை அதிபர்களைப் பற்றி பதைரப்பட்ட புகார்கள் கல்வி அமைச்சுக்கு கிடைத்துள்ளன.

இவ்வாறு கல்வி உயர்கல்வி அமைச்சர் தெற்கில் நடந்த வைபவம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய அமைச்சர் இவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

சில அதிபர்கள் பாடசாலைகளில் பணமோசடி செய்துள்ளதாகவும் புகார்கள் வந்துள்ளன எனவும் அவர் சொன்னார். (33)

## தாய்லாந்து இளம் பெண் மாடியிலிருந்து குதித்து மரணம்

தாய்லாந்து யுவதி ஒருவர் கொழும்பிலுள்ள பிரபல கோட்டல் ஒன்றின் மேல் மாடியிலிருந்து விழுந்து தற்கொலை செய்து கொண்ட சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர்.

கடந்த பெப்ருவரி மாதம் இவருடன் வேறு ஆறு தாய்லாந்துப் பெண்கள் இங்கு வந்ததாகவும் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

இவர்கள் இங்கு நடைபெறும் சூதாட்ட விடுதிக்கு கொண்டுவரப்பட்டு இருக்கலாமெனவும் சந்தேகிக்கப்படுகிறது. (33)

வியாங்கொடை கொலை வழக்கில்

## இரு குற்றச்சாட்டிலிருந்து எதிரிகள் விடுதலை

சட்டத்தரணி வியானாராய்ச்சி கொலை தொடர்பான வழக்கில் சந்தேகநபர்கள் மூவரையும் சதி, கொலை ஆகிய இரு குற்றச்சாட்டுக்களிலிருந்து நீதிமன்றம் விடுவித்துள்ளது.

இந்த வழக்கு ''ட்ரயல்அட் பார்'' மேல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வந்தது

அத்துடன் எண்பதினாயிரம் ரூபா நஷ்டஈடு வழங்குமாறும் எதிரிகளுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

முன்னாள் பொலிஸ் சுப்பிரீண்டன் கே. தர்மதாஸ, சப் இன்ஸ்பெக்டர் எம்.எச்.மென்டிஸ், கொன்ஸ்டபிள் எம். திஸநாயக்கா ஆகியோர் மீது இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

சட்டவிரோதமான முறையில் தடுத்து வைத்திருந்தனர் என்ற மூன்றாவது குற்றச்சாட்டில் நஷ்ட ஈடு வழங்குமாறு தீர்ப்பளிக்கப்பட்டது.

## வர்த்தகரின் நகை கொள்ளை இளம் தம்பதியினர் கைது

தெகிவளை, வெள்ளவத்தைப் பாலத்தில் சோதனையில் ஈடுபட்ட பொலிஸார் ... சோதனையிட்ட பொழுது மேலும் சில நகைகள் கைப்பற்றப்பட்டதால் இவர்கள் கைது செய்யப்பட்...

தார்.

ஒத்திவைக்கப்பட்ட கடுமி

**கம்புறுப்பிட்டி...**

ளார்.

வீரபாகு என்ற இந்தத் தமிழரின் இச்செயலையடுத்து 'வீரபாகு கம', என்ற வீடமைப்பு திட்டமும் உருவாக்கப்படவுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (38)

**மின்சாரம்...**

மின்மாற்றிகள் மட்டும் பாவிக்க கூடியதாக இருக்கும் மற்றையவை அனைத்தும் அகற்றப்பட்டு புதியவை பொருத்த வேண்டிவரும்.

ஆகமின்சாரம் வழங்க அரசு சம்மதித்தாலும் மின் மாற்றிகள் அதற்கு தடங்கலாக இலக்கும் இவ்வாறு அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார் (70)

**வவுனியா...**

குளம் மகா வித்தியாலயம் ஆகியவற்றுக்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப் பட்டுள்ளன. (38)

பகுதியில் ஒரு போத்தல் மோர் பத்து ரூபாவிற்கு விற்பனை செய்யபபட்டு வருகின்றது. (19)

**மாத்தளையில்—**

அறிவிப்புகிடைத்ததாகஎட்டு தமிழ்ப் பெண்களே இதில் கலந்துகொண்டனராம். (38)

**எஸ்.ரி. சோம...**

டுள்ளதாக தெரிவித்தார்.

முன்பு இப்பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த ஒருவருக்குப் பதிலாகவே தற்போது சோமசுந்தரம் நிறுத்தப்பட்டுள்ளார்.

சில தினங்களுக்கு முன் சோமசுந்தரம் எந்த சட்டப் பேரவை தொகுதியிலும் நிறுத்தப்படாதது குறித்து ஜெயலலிதா அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

**சிறுவர்...**

மின் இயந்திரத்திலும் தீப் பிடித்த பின்னர் அயலவரின் உதவியுடன் அணைக்கப்பட்டது. (ப 35)

நியாயப்படுத்த முடியாது. வேண்டுமென்றே செய்யப்படும் கொலைகளையும் ஆயிரக்கணக்கானோர் காணாமல் போவதையும் நியாயப்படுத்த முடியாது

ஆயுதம்தாங்கியதீவிரவாதக் குழுக்கள் அரசபடையினரை ஆத்திரமூட்டுகின்றன, அதனால் அவர்கள் வரம்பு மீறி நடக்கிறார்கள் என்ற தங்கள் கருத்து மிக ஆபத்தானது' பயம் காரணமாக படையினர் புரியும் கொலைகளைப்பற்றி நாம் இங்கு பேசவில்லை. ஒருசம்பவம் நடந்து பல மணித்தியாலங்களோ, சில நாளகளோ கழிந்த பிறகு, அல்லது மக்கள் கைதான பிறகு, படையினர் வேண்டுமென்றே செய்யும் கொலைகளையே நாம் ஆட்சேபிக்கின்றோம்.

சர்வதேச மனித உரிமைகள் சட்டம் அரசாங்க பொறுப்பின் அடிப்படையில் எழுந்தது, அரசாங்கங்களுக்கு தமது குடிமக்கள் பாலும், சர்வதேச சமூகத்தின் பாலும் ஒரு சிறப்பான பொறுப்பு உண்டு தீவிரவாதக்குழுக்களுக்கு அவ்வித பொறுப்பு எதுவும் இல்லை.

இவ்வாறு அக்கடிதத்தில் செயலாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

ஓய்வு பெறவுள்ளதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இம்மாத இறுதியுடன் இவர் ஓய்வு பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

**மந்திகை...**

யாக வைத்தியசாலை இரத்த வங்கிப் பகுதியுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

புலோலி தெற்கைச் சேர்ந்த ஆசிரிய பயிற்சிக்கலா சாலை மாணவி ஒருவரும், உடுப்பிட்டியைச்சேர்ந்த செல்வன் இ. இராகுலன்என்ற இளைஞரும் கடந்த வாரம் நோயாளர்களின் நன்மை கருதி இரத்த வங்கியில் இரத்ததானம் செய்துள்ளனர். (15)

**பரீட்சை...**

விப் பணிப்பாளர் தலைமையிலான குழு நேற்றுக்காலை வவுனியா வந்து சேர்ந்து விட்டதாக அறிவிக்கப்பட்டது. (70)

**பரப்புக்கடந்தான்...**

லெப். தென்னவன் (வைலிக் கினேஸ்வரன் தொண்டமனாறு), லெப். வாசு (துதிவ் வியராஜா நெல்லியடி), இலோ ஆகியோர் வீரமரணமடைந்தனர். (71)

தைப் பாலத்தில் சோதனையில் ஈடுபட்ட பொலிஸார் பல லட்சம் ரூபா பெறுமதியான நகைகளுடன் வந்த இளம் தம்பதியினரை கைது செய்துள்ளனர்

இவர்கள் அளவுக்கதிகமான நகைகளை அணிந்துவந்ததால் சந்தேகம் கொண்ட பொலிஸார் அவர்களின் பொதிக

## நூலகத்தின் அருகில் துர்நாற்றம்

சங்கானை பொது சனநூல் நிலையத்தின் சுற்றாடலில் இருந்து துர் நாற்றம் வீசுவதால் வாசிகசாலைக்கு தினசரி வரும் பெருந்தொகையான வாசகர்கள் மூக்கைப் பொத்திக் கொண்டு வாசிக்க வேண்டியிருப்பதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது. (13)

**லெப். கேணல் கிரேசி...**

கண்டி வீதியூடாக சாவகச்சேரிக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் கிளிநொச்சி நோக்கி புறப்பட்டது.

இவரின் புகழுடல் இன்று மாலை 3 மணிக்கு கிளிநொச்சி மாவீரர் மயானத்தில் தகனம் செய்யப்படும். (71)

கள் கைப்பற்றப்பட்டதால் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கருவாக்காட்டுப்பகுதியில் வர்த்தகர் ஒருவரிடமிருந்து இவை கொள்ளையடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. 33

## முதலுதவிச் சிகிச்சை நிலையம்

ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கம் பருத்தித்துறை இறங்குதுறைக்கு அருகாமையில் முதலுதவி நிலையமொன்றை ஆரம்பித்துள்ளது.

கொழும்பிலிருந்து பொருள்களைக் கொண்டுவந்துள்ள கப்பல்களில் பொருள்களை இறக்கும் காலங்களில் இந்த முதலுதவி நிலையம் செயற்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (15)

**யாழ்...**

கொட்டகைகள் முற்றாக எரிந்தன.

தீச்சுவாலை ஓங்கி எரிந்ததால் நகரில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

மாநகரதீயணைக்கும் படையினர் பலத்த சிரமத்தின் மத்தியில் தீ பரவாது அணைத்தனர். (74)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவெட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சு வீதி ஷ்மிபில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 21-04. 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.